1969 மார்ச் 10]

குழந்தைகள் காப்பகம்.

*258 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊர்களிலும் குழந்தை பராமரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

களக்காடு கிராமத்தில் கைதான சாகுபடியாளர்களை விடுதலை செய்து சாகுபடி செய்ய பாதுகாப்பு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு அழகர்சாமி அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். "திருநெல்வேலி மாவட்டம் களக்காடு கிராமத்தில் நீண்ட நாட்களாக சாகுபடி செய்து கொண்டு வந்த சாகுபடியாளர்களுக்கு தாங்கள் அளக்கும் குத்தகை நெல்லுக்கு நிலச்சுவாந்தார் ரசீது கொடுக்க மறுத்தும் சாகுபடியாளர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு அவ் வட்டாரத்தில் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டு உள்ளதால் சாகுபடியாளரை விடுதலை செய்து சாகுபடி செய்ய அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்" என்று காரணம் காட்டி ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மு.ப. 10 00

இதை அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகக் கருத இடமில்லை. மேலும், உறுப்பினர் அவர்களுக்கு, வருகிற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கருத்துக்கள் தெரிவிப்பதற்கு வாய்ப்பிருப்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

வானொலிச் செய்தி ஒலிபரப்பில் இந்திக்கு முதலிடம் அளித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு மலைச்சாமி அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வானொலியில் ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பும் நேரத்தை மாற்றி இந்திக்கு முதலிடம் தந்திருப்பதால் மாணவர்களும் பொது மக்களும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்ற நிலைபற்றிய அவசிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.